IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:1/2018

**DEP OF WITNESS: PW1**

| | |
|---|---|
| NAME: Venkatathiri | RELIGION: |
| FATHER NAME: | CASTE: |
| VILLAGE: | OCCUPATION: |
| TALUK: | AGE: |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 05-01-2019

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:-**

நான் விவசாயம் தொழில் செய்கிறேன். பிரதிவாதி எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர் என்ற முறையில் எனக்கு தெரியும். 07.02.2016-ம் தேதியில் நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு பணத்தை காசோலையாக கொடுத்தேனா அல்லது ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாக தான் கொடுத்தேன். 100 ரூபாய் நோட்டுகளாக தான் கொடுத்தேன். தாவா புரோநோட்டை பிரதிவாதி தான் எழுதி எடுத்துக்கொண்டு 2 சாட்சி ஆட்களுடன் வந்து என்னிடம் கொடுத்து கடன் வாங்கி சென்றார். தாவா புரோநோட்டை படித்து பாரத்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது அவர்கள் படித்து காண்பித்தார்கள். யார் படித்து காண்பித்தார்கள் என்றால் பிரதிவாதி தான் படித்து காண்பித்தார். தாவா புரோநோட்டை யார் எழுதினார்கள் என்று எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் எழுதியவராக கையொப்பமிட்டுள்ளார்களா என்றும் எனக்கு தெரியாது. பிரதிவாதியுடன் வந்ததாக சொல்லும் 2 சாட்சிகள் என் முன்னிலையில் சாட்சி கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை அவர்கள் ஏற்கனவே சாட்சி கையொப்பம் போட்டு தான் எடுத்துவந்தார்கள். எனது முன்னிலையில் வைத்து பிரதிவாதி தாவா புரோநோட்டில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியினுடையது தான் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல பிரதிவாதியினுடையது தான். புரோநோட்டில் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளவர்களும் என் முன்னிலையில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சிகளின் முகவரிகள் எதுவும் புரோநோட்டில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எனது ஊரில் வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி நான் சொல்வது போல என்னிடம் கடனே வாங்கவில்லை என்றும் அதற்காக புரோநோட்டும் எதுவும் எழுதிகொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள சாட்சிகளை எனது தரப்பில் சாட்சியாக

விசாரிக்கப்போகிறேனா என்றால் விசாரிக்கப்போகிறேன். பிரதிவாதிக்கு ரூ.10,00,000/- மதிப்பு கொண்ட சொத்துக்கள் உள்ளது என்றும், அவருக்கு மாதம் ரூ.20,000/- வருமானம் வருகிறது என்றும் தாவாவில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. பிரதிவாதி என்னிடம் வந்து ரூ.50,000/- கடன் கேட்டார் என்றும் அப்போது நான் ரூ.100-க்கு மாத வட்டி ரூ.5/- என்று நான் சொன்னதால் அவர் பணமே வேண்டாம் என்று திரும்பி சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் தாவா புரோநோட்டை நான் தயார் செய்து கொண்டு அதன் பேரில் பொய்யாக இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- VENKATATHIRI (PW1)

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/. C.Senthil Kumar. 05.01.2019.
District. Munsif.